# உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தினூடாக கொண்டுவரப்படவுள்ள மாற்றங்களின் சுருக்கம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

செப்ரம்பர் **2020**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) முதன்மையாக ஆளுகை மற்றும் முரண்பாட்டுத் தீர்வு போன்ற பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தி வரும் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற ஒரு நிறுவனமாகும். அரசாங்கக் கொள்கை தொடர்பான விவாதத்தில் குடிமைச் சமூகத்தின் முக்கியமான பங்களிப்பை பலப்படுத்த வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்ற உறுதியான நம்பிக்கையுடன் 1996 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரப்புரை என்பவற்றுக்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அவற்றுக்கு ஊடாக அரசாங்கக் கொள்கை தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, மாற்றீடுகள் அடையாளம் காணப்பட்டு, பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

இல. 6/5, லயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை.
தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386
தொலைநகல்: +9411 2081388
இணையதளம்: www.cpalanka.org
மின்னஞ்சல்: info@cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்: @cpas

## உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தினூடாக கொண்டுவரப்படவுள்ள மாற்றங்களின் சுருக்கம்

அரசாங்கங்களின் வேறுபட்ட அங்கங்களுக்கிடையிலான வலுவேறாக்கம் தொடர்பான இயங்கியலை நிறைவேற்று ஜனாதிபதிக்கு சார்பானதொரு அதிகார சமநிலையுடன் கூடியதாக மாற்றுவதன்மூலம், உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தமானது தற்போதைய அரசியலமைப்பில் பல முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இத்திருத்தமானது சட்டவாக்க செயன்முறையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இம்மாற்றங்கள் குறிப்பிட்ட ஒரு சட்டவாக்கமானது சட்டமாக இயற்றப்படுவதற்கு முன்னர் அதனை மீளாய்வு செய்வதன் மூலமாக அதனை சவாலுக்குட்படுத்துவதற்கான பிரஜைகளுடைய வாய்ப்பினைக் குறைப்பதனூடாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலை இல்லாமல் செய்யும். 19 ஆவது திருத்தத்தினூடாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையின் கட்டமைப்பு மற்றும் அதிகாரங்கள் என்பன மாற்றப்பட்டுள்ளன. இது சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையில் பாரதூரமானத் தாக்கங்களை ஏற்படுத்தும். எவ்வாறெனினும், 19 ஆவது திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று விடயப்பரப்புக்கள் மாற்றப்படாது அவ்வாறே உள்ளன. தகவலுக்கான உரிமையினை அறிமுகப்படுத்திய உறுப்புரை 14அ ஆனது எவ்வித மாற்றங்களுக்குமுள்ளாகாமல் அவ்வாறே உள்ளது, நிறைவேற்று ஜனாதிபதி பதவி வகிக்கக்கூடிய தவணைகளின் எண்ணிக்கை இரண்டாகவே உள்ளது (இம்மட்டுப்பாடு முன்னர் 18 ஆவது திருத்தத்தினால் நீக்கப்பட்டு பின்னர் 19 ஆவது திருத்தத்தினால் மீள அறிமுகப்படுத்தப்பட்டது) மற்றும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடங்களாகவே உள்ளது (19 ஆவது திருத்தத்திற்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 6 வருடங்களாகக் காணப்பட்டது).

கீழ்வரும் அட்டவணையானது தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்துடனான அரசியலமைப்பு ஆகியவற்றுக்கிடையிலான ஒரு விரிவான ஒப்பீட்டினை வழங்குகின்றது. இவ் ஒப்பீட்டுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சில ஆரம்ப குறிப்புக்கள் மற்றும் அவதானிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

| தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடு | 20 ஆவது திருத்தத்தின்கீழ் முன்மொழியப்பட்டுள்ள மாற்றம் | திருத்தத்தின் விளைவுகள் / குறிப்புக்கள் |
|---|---|---|
| **ஜனாதிபதியின் விடுபாட்டுரிமை** | | |
| **உறுப்புரை 35**<br><br>(1) எவரேனுமாள் ஜனாதிபதி என்ற பதவியை வகிக்கின்ற போது, அவரது பதவி | **இருபதாவது திருத்தத்தின் 5 ஆம் வாசகமானது உறுப்புரை 35 இனை நீக்கி பின்வருவனவற்றைச் சேர்க்கின்றது:**<br><br>உறுப்புரை 35 | உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்திற்கு அமைவாக, அவருடைய ஜனாதிபதி பதவிக் காலப்பகுதியின்போது, கீழ்வரும் மட்டுப்பாடான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய **அனைத்து சட்ட நடவடிக்கைகளிலிருந்தும்** விடுபட்டவராக |

முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு எதுவும் தொடுக்கப்படுதல் அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதல் ஆகாது.

**எவ்வாறெனினும், இப்பந்தியிலுள்ளது எதுவும் ஜனாதிபதியால் தமது பதவிமுறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் 126 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்துறை தலைமையதிபதிக்கு எதிராக தோதான வழக்கு நடவடிக்கையைத் தொடுப்பதற்கு எவரேனுமாளுக்குள்ள உரிமையை மட்டுப்படுத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது:**

**எவ்வாறெனினும், மேலும் 33(2)(எ) என்னும் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியால் பிரயோகிக்கப்படும் எந்த தத்துவங்கள் மீதும் எத்தீர்ப்பையும் வெளிப்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் நியாயாதிக்கம் உடையதல்ல.**

(2) எவரேனுமாளுக்கு எதிராக எவ்விவரணத்திலுமான வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான கால எல்லையை வரையறுத்துச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எதனையும் கணிப்பதில், அத்தகைய ஆள் இலங்கைக் குடியரசின் ஜனாதிபதிப் பதவியை வகிக்கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

(1) எவரேனும் ஆள் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றபோது, அவரது பதவிமுறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடுபட்ட எவ்விடயம் தொடர்பிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடத்தப்படுதலோ ஆகாது.

(2) எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் விவரணத்தினவையுமான வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான காலவெல்லையை வரையறுத்து சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவிடத்து, அச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எதனையும் கணிப்பதில் அத்தகைய ஆள் ஜனாதிபதி என்ற பதவி வகிக்கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படல் ஆகாது.

(3) இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்டுள்ள விடுபாட்டு உரிமை, 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் ஜனாதிபதிக்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது 129 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அல்லது மக்கள் தீர்ப்பொன்றில் செல்லுபடியாந்தன்மை தொடர்பாக இருப்பார்.

அ) அமைச்சர் என்ற தகைமையில் ஜனாதிபதியினால் செய்யப்பட்ட செயல்கள்

ஆ) உறுப்புரை 129(2) இற்கமைவாக மேற்கொள்ளப்படுகின்ற குற்றச்சாட்டு நடவடிக்கைகள்

இ) சர்வசன வாக்கெடுப்பு அல்லது ஜனாதிபதித் தேர்தலின் வலிதாந்தன்மை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற தேர்தல் மனு (உறுப்புரை 130 (அ))

ஈ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தெரிவு தொடர்பாக உறுப்புரை 144 இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை முறைகள்

தற்போது வலுவிலுள்ள ஏற்பாடானது சிவில் மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைகளுக்கு மாத்திரமே விடுபாட்டுரிமையினை அளிக்கின்றது.

தற்போது வலுவிலுள்ள ஏற்பாடுகள் அரசியலமைப்பின் உறுப்புரை 126 இற்கு அமைவாக அடிப்படை உரிமை மனுக்களை பதிவு செய்வதற்கான உரிமையினை பிரஜைகளுக்கு வெளிப்படையாக வழங்குகின்றது. இவ் உறுப்புரையும் 20 ஆவது திருத்தத்தினால் நீக்கப்படவுள்ளது.

| | | |
|---|---|---|
| (3) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட விடுபாட்டுரிமை, 129 என்னும் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழும் மற்றும் 130 (அ) என்னும் உறுப்புரையின் கீழும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் வலிதுடைமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது. | 130(அ) என்னும் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது பாராளுமன் உறுப்பினரொருவரின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலான அல்லது உயர் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகாது:<br><br>எவ்வாறெனினும், அத்தகைய ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் தத்துவததைப் பிரயோகித்தல் தொடர்பான அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகள், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எதிராகத் தொடுக்கப்படுதல் வேண்டும். | |
| **ஜனாதிபதியின் கடமைகள்** | | |
| **உறுப்புரை 33(1)** ஜனாதிபதியின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும்:-<br><br>(அ) அரசியலமைப்பு மதிக்கப்பட்டு போற்றப்படுதலை உறுதிப்படுத்தல்;<br>(ஆ) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தல்;<br>(இ) அரசியலமைப்புப் பேரவை மற்றும் VII அ என்னும் அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்துதலும் சாத்தியப்படுத்தலும்; அத்துடன்<br>(ஈ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் மதியுரையின் மீது சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களும், சர்வசன வாக்கெடுப்பும் நடைபெறுவதற்கான உகந்த நிபந்தனைகள் | **20 ஆவது திருத்தத்தின் 3 ஆவது வாசகமானது உறுப்புரை 33(1) மற்றும் உறுப்புரை 33(2)(இ) என்பவற்றை நீக்குகின்றது** | |

| | | |
|---|---|---|
| உருவாக்கப்படுதலை உறுதிசெய்தல்.<br><br>**உறுப்புரை 33(2)(இ)** ஆனது பாராளுமன்றத்தைக் கூட்டுதல், அமர்வு நிறுத்தல் அத்துடன் கலைத்தல் போன்ற அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது.<br><br>**உறுப்புரை 33(அ)** ஜனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதுள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்ளையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்பாதல் வேண்டும். | **உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின் 4 ஆவது வாசகம் உறுப்புரை 33அ இனை நீக்குகின்றது. எவ்வாறெனினும், இவ் உறுப்புரை 20 ஆவது திருத்தத்தின் 7 ஆவது வாசகத்தினூடாக ஆட்சித்துறை எனும் அதிகாரத்தின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. (உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் 42 ஆவது உறுப்புரை)** | |
| **அரசியலமைப்பு பேரவையினை பாராளுமன்றப் பேரவையினால் பதிலீடு செய்தல்** | | |
| **உறுப்புரை 41அ**<br>அரசியலமைப்பு பேரவையானது **மூன்று** பதவி வழி உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்- பாராளுமன்றத்தின் சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்.<br><br>***உறுப்புரை 41அ (1)(அ, (ஆ) மற்றும் (இ)***<br><br>பாராளுமன்றத்தின் ஏனைய **நான்கு உறுப்பினர்கள்**<br><br>➢ ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் **ஒருவர் (உறுப்புரை 41அ (1) (ஈ))**<br>➢ பிரதம அமைச்சர் மற்றும் எதிர்கட்சித் | **20 ஆவது திருத்தத்தின் ஆறாவது வாசகமானது அரசியலமைப்பு பேரவை தொடர்பான அரசியலமைப்பின் அத்தியாயம் VIIA இனை முழுமையாக நீக்கி அதனை பாராளுமன்றப் பேரவையினால் பதிலீடு செய்கின்றது.**<br><br>**உறுப்புரை 41அ**<br><br>பாராளுமன்ற பேரவை பின்வருவோரைக் கொண்டிருக்கும்.<br><br>(அ) பிரதம அமைச்சர்;<br>(ஆ) சபாநாயகர்;<br>(இ) எதிர்க்கட்சித் தலைவர்;<br>(ஈ) பாராளுமன்ற உறுப்பினரொருவராகவிருக்க | உத்தேசிக்கப்பட்ட திருத்தத்தின்கீழ் பாராளுமன்றப் பேரவையானது பாராளுமன்ற உறுப்பினர்களை **மாத்திரமே** கொண்டமைந்திருக்கும்.<br><br>பாராளுமன்றப் பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு அல்லது பிரதான எதிர்க் கட்சிக்கு விசுவாசமுடையவர்களாக இருப்பார்கள்.<br><br>பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுகின்ற ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவம் இல்லை. |

| | | |
|---|---|---|
| தலைவர் ஆகிய இருவரினதும் பெயர் நியமனத்தினூடாக நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் **இருவர்**. **(உறுப்புரை 41அ (1) (உ))**<br>➢ அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் **ஒருவர்**. **(உறுப்புரை 41அ (1) (ஊ))**<br><br>**பகிரங்க வாழ்வில் அல்லது உயர் தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை** ஏற்படுத்திக் கொண்ட **கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும்** அத்துடன் ஏதேனும் **அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான** பிரதம அமைச்சரினாலும் எதிர்கட்சித் தலைவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படும் **மூன்று** நபர்கள்.<br><br>பிரதம அமைச்சரினாலும் எதிர்கட்சித் தலைவரினாலும் மேற்கொள்ளப்படும் இந்நியமனங்கள் பாராளுமன்றத்தின் அனுமதியினைப் பெறுதல் வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றன. **(உறுப்புரை 41அ (1) (உ) மற்றும் 41அ (5))**<br><br>இவ் ஐந்து ஆட்களை (அதாவது, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூன்று கீர்த்தி வாய்ந்த சுயாதீன நபர்கள்) நியமிக்கையில், பிரதம அமைச்சரும், எதிர்கட்சித் தலைவரும், அரசியலமைப்புப் பேரவை, உயர்தொழில் மற்றும் வேறுபட்ட | வேண்டிய பிரதம அமைச்சரின் ஒரு நியமத்தர்; அத்துடன்<br>(உ) பாராளுமன்ற உறுப்பினரொருவராகவிருக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவரின் ஒரு நியமத்தர்<br><br>எவ்வாறெனினும், மேலுள்ள (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் நியதிகளின்படி நியமிக்கப்படும் ஆட்கள், மேலுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் எந்தச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனரோ அந்தச் சமுதாயங்கள் அல்லாத சமுதாயங்களாகவுள்ள சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாகவிருக்கும் நியமத்தவர்களாகவிருப்பதை உறுதி செய்யும் வகையில் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். | **எந்தவொரு அரசியல் கட்சியிலும் அங்கத்துவம் வகிக்காத உயர் புகழ் மற்றும் கௌரவத்தினைக்** கொண்டுள்ள நபர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை.<br><br>இலங்கையின் பன்முகத்தன்மை பண்பிற்கான அங்கீகாரம் மற்றும் பிரதான பதவிநிலைகளுக்கான நியமனங்களை மேற்கொள்ளும்போது வேறுபட்டக் கருத்துக்களை கவனத்திலெடுக்கவேண்டிய தேவைக்கான அங்கீகாரம் என்பன வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின சமுதாயங்களைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் பிரதிநித்துவம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளதும், சுயேட்சைக் குழுக்களதும் தலைவர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும். **(அரசியலமைப்பின் உறுப்புரை 41அ (4))** | | |
| **அரசியலமைப்புச் சபையின் பதவிக்காலம்**<br><br>**உறுப்புரை 41அ**<br><br>(7)(அ) பாராளுமன்றம் கலைக்கப்படுகின்றபோது, 64ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்…<br><br>(ஆ) பாராளுமன்றம் கலைக்கப்படுகின்ற போதிலும், பிரதம அமைச்சரும், எதிர்கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ள பேரவையின் உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பைப் பின்தொடர்கின்ற பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், விடயத்திற்கேற்ப, பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல்லது எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அல்லது (1) ஆம் பிரிவின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் உறுப்பினர்களாக | **20 ஆவது திருத்தத்தின் 6 ஆம் வாசகமானது அரசியலமைப்பின் அத்தியாயம் VIIஅ இனை முழுமையாக நீக்குகின்றது.**<br><br>பாராளுமன்றப் பேரவையின் பதவிக்காலம்- **வாசகம் 6** இலுள்ள உறுப்புரை 41 (அ)<br><br>(4) பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளபோதிலும், சபாநாயகர் உறுப்புரை 64 இன் 1 ஆம் பந்தியின்கீழ், பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.<br><br>(5) பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலொன்று இடம்பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்படுகின்றவரையில் எதிர்க்கட்சித்தலைவர் பேரவையின் உறுப்பினரொருவராகப் பதவியை தொடர்ந்து வகித்தல் வேண்டும்.<br><br>(6) பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளபோதிலும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள முறையே பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் நியமத்தர்கள், அத்தகைய கலைப்பையடுத்து நடைபெறும் ஒரு பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற | உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தமானது பிரதம அமைச்சரை எந்த நேரத்திலும் பதவி நீக்குகின்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது **(உறுப்புரை 47(அ), 6 ஆம் வாசகம்)**.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தத்தின்கீழ், ஜனாதிபதி பிரதம அமைச்சரினால் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் பெயர் குறிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் இரண்டு உறுப்பினர்களை எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு காரணத்திற்காகவும் நீக்க முடியும். |

| | | |
|---|---|---|
| நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை, பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.<br><br>(8) ஓராம் பந்தியின் (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் முன்னதாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது **பிரதம அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் ஆகிய இருவரும், அத்தகைய உறுப்பினர் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராகவும் அத்துடன் உடல் ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராகவும் உள்ளார் என அபிப்பிராயம் கொள்ளுவதன் மீது, ஜனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய** அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி அவர் மீது குடியியல் தகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41 (உ) என்னும் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின் கீழ் அவருடைய பதவியை வெறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பினராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும். | உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.<br><br>(7) இவ்வுறுப்புரையின்கீழ் அமைக்கப்பட்ட பேரவையின் பதவிக்காலம், 62 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு நீடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதவிக்காலம், 70 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் ஏதேனும் அமர்வு நிறுத்தத்தினால் பாதிக்கப்படுதலுமாகாது:<br><br>எவ்வாறெனினும், முறையே பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் நியமத்தர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய பதவிக்காலத்தின் போது, **ஜனாதிபதியினால் அகற்றப்படும் அல்லது** அத்தகைய நியமத்தர் இயலாமைக்குட்படும் பட்சத்தில் பேரவையில் தமது நியமத்தராகவிருப்பதற்கு வேறொரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி விடயத்துக்கேற்ப, பிரதம அமைச்சரை அல்லது எதிர்க்கட்சித் தலைவரை ஜனாதிபதி **தேவைப்படுத்தலாம்…** | |

| பாராளுமன்றப் பேரவையின் மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கு | | |
|---|---|---|
| ***உறுப்புரை 41ஆ (1)***<br><br>**<u>அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் மட்டுமே</u>** கீழேயுள்ள ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட முடியும். அவ் ஆணைக்குழுக்களாவன:<br><br>தேர்தல்கள் ஆணைக்குழு<br>பகிரங்க சேவை ஆணைக்குழு<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு<br>நிதி ஆணைக்குழு<br>எல்லை நிர்ணய ஆணைக்குழு<br>தேசிய கொள்முதல் ஆணைக்குழு<br>கணக்காய்வு சேவை ஆணைக்குழு<br><br>**<u>உறுப்புரை</u> 41ஆ(3)**<br><br>ஜனாதிபதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணைக்குழுவிற்குமான தவிசாளரை பேரவையின் விதந்துரையின்பேரில் நியமிக்க வேண்டும். இந்நோக்கத்திற்காக, பேரவை ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் மூன்று நபர்களுடைய பெயரை ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். | **20 ஆவது திருத்தத்தின் 6 ஆம் வாசகம், <u>உறுப்புரை</u> 41(அ)**<br><br>1) இவ்வுறுப்புரைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் அத்துடன் இவ்வுறுப்புரைக்கான அட்டவணை II இன் I ஆம் பாகத்திலும் II ஆம் பாகத்திலும் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ள ஆட்களும், ஜனாதிபதியினால் அத்தகைய ஆணைக்குழுக்களுக்கும் அத்தகைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நியமனங்களைச் செய்வது தொடர்பாக ஜனாதிபதி, பாராளுமன்றப் பேரவையின் <u>அவதானிப்புகளைக் கோருதல்</u> வேண்டும்.<br><br>அட்டவணை I<br><br>1. தேர்தல்கள் ஆணைக்குழு<br>2. பகிரங்க சேவை ஆணைக்குழு<br>3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br>4. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>5. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு<br>6. நிதி ஆணைக்குழு<br>7. எல்லை நிர்ணய ஆணைக்குழு | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், அரசியலமைப்பு பேரவையின் தீர்மானங்கள் ஜனாதிபதியினை பிணிக்கும் தன்மை வாய்ந்தன.<br><br>இதற்கு முரணாக, பாராளுமன்றப் பேரவை வெறுமனே அவதானிப்புக்களை **மாத்திரமே** மேற்கொள்ளவியலும். ஜனாதிபதி அவ் அவதானிப்புக்களால் பிணிக்கப்படமாட்டார், அவர் வெறுமனே "அவதானிப்புக்களை கோர வேண்டும்." அவ் அவதானிப்புக்களைக் கருத்தில் கொள்ள வேண்டிய கடப்பாடுகூட ஜனாதிபதிக்கு இல்லை.<br><br>ஆகவே, பாராளுமன்றப் பேரவையானது அரசியலமைப்பு பேரவையினைக் காட்டிலும் மிகவும் பலவீனமானதொன்றாகும்.<br><br>பகிரங்க சேவையில் பிரதான பதவி நிலைகளுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்பபாடுகளற்றதாக உள்ளது.<br><br>தேசிய கொள்முதல் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு என்பன |

| | | |
|---|---|---|
| **உறுப்புரை 41ஆ (5)**<br><br>ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, **<u>பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே</u>** அத்தகைய ஆள் ஜனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.<br><br>**அரசியலமைப்பின் உறுப்புரை *41*இ (1)**<br><br>பின்வருவனவற்றுக்கான **<u>ஜனாதிபதியின் பெயர் நியமனங்களுக்கு அரசியலமைப்பு பேரவை அனுமதியளிக்க வேண்டும்</u>**<br><br>➢ பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும்<br>➢ மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்<br>➢ நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ சட்டமா அதிபர்<br>➢ கணக்காய்வாளர் நாயகம்<br>➢ பொலிஸ்மா அதிபர்<br>➢ பாராளுமன்ற குறைகேள் அதிகாரி<br>➢ பாராளுமன்றச் செயலாளர் நாயகம் | அட்டவணை II<br>பகுதி I<br><br>1. பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும்<br>2. மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்<br>3. தவிசாளர் தவிர்ந்த நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br><br>பகுதி II<br><br>1. சட்டமா அதிபர்<br>2. கணக்காய்வாளர் நாயகம்<br>3. பாராளுமன்ற குறைகேள் அதிகாரி<br>4. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்<br><br>(10) இவ்வுறுப்புரையின் அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டவரும், ஓர் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினராக இருப்பதற்கு நியமிக்கப்பட்டவருமான ஆளெவரும் அல்லது இவ்வுறுப்புரைக்கான அட்டவணை II இன் I ஆம் பாகத்திலும் II ஆம் பாகத்திலும் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்களுள் எவரும், அரசியலமைப்பில் அல்லது அத்தகைய நோக்கத்துக்காக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதலாகாது. **<u>அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய ஆள் ஜனாதிபதியினால் அகற்றப்படுதல் வேண்டும்.</u>** | ஒழிக்கப்பட்டுள்ளன. (**20 ஆவது திருத்தத்தின் 57(4) ஆவது வாசகத்தையும்** பார்க்க)<br><br>மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்களை நீக்குவதற்கான நடபடிமுறையொன்று அரசியலமைப்பிலோ அல்லது வேறேதேனும் எழுதப்பட்ட சட்டத்திலோ குறிப்பிடப்படாதிருக்கின்ற அதேவேளை<br><br>➢ தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி இத்தகைய ஒரு நபரை அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் நீக்கலாம்.<br><br>➢ உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதி பாராளுமன்றப் பேரவையின் "அவதானிப்புக்களைப்" பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை கூட இல்லை என்பதுடன் அத்தகைய ஒரு நபரை அவருடைய விருப்பத்தின்பேரில் நீக்க முடியும்.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், உறுப்புரை 41அ இன் அட்டவணையின் பகுதி I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளின் பட்டியலிலிருந்து பொலிஸ்மா அதிபர் நீக்கப்பட்டுள்ளார். அரசியலமைப்பு பொலிஸ்மா அதிபரின் நியமனம் குறித்து எதுவும் குறிப்பிடாதமையினால் இது அப்பதவி நிலையின் நியமனம் தொடர்பாக ஒரு இடைவெளியினைத் |

| | | |
|---|---|---|
| **உறுப்புரை *41*இ (3)**<br><br>இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும், அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது. | | தோற்றுவிக்கின்றது.<br>- **தகவலுரிமைக்கான ஆணைக்குழு**<br>- **காணாமல் போனோருக்கான அலுவலகம்**<br>- **இழப்பீடுகளுக்கான அலுவலகம்**<br><br>போன்றவற்றுக்கான நியமனங்களை செய்வது தொடர்பிலான எவ்வித நிலைமாற்ற ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படவில்லை.<br><br>இம்மூன்றுச் சட்டங்களும் நியமனங்கள் அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துகின்றது.<br><br>அரசியலமைப்பு பேரவை ஒழிக்கப்படுதல் மற்றும் அதனை பதிலீடு செய்கின்ற பாராளுமன்றப் பேரவை சிபாரிசுகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்காமை என்பன தனிச் சட்டங்களுக்கான திருத்தங்களைத் தேவைப்படுத்துகின்றது.<br><br>இச்சந்தர்ப்பத்தினைக் கையாளகூடிய நிலைமாற்ற ஏற்பாடொன்று இல்லாமை மற்றும் மேற்கூறப்பட்ட சட்டங்களுக்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை என்பன அவ் ஆணைக்குழுக்களை செயற்படாத நிலைக்கு இட்டுச் செல்லும். |

| | | |
|---|---|---|
| **அரசியலமைப்பின் உறுப்புரை 41உ (4) மற்றும் (5)**<br><br>பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிவையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிவொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிவு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் **ஐந்து உறுப்பினர்களுக்குக்** குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய, வலிதுடையதாகாது. (கூட்டத்தின் தவிசாளர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் ஏதேனும் விதந்துரை, அனுமதி அல்லது தீர்மானம் தொடர்பில் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.)<br><br>**உறுப்புரை 41உ (3)**<br><br>பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். | **உறுப்புரை 41அ (8)- வாசகம் 6**<br><br>(அ) ஓராம் பந்தியின் கீழ் பேரவையின் அவதானிப்புகளை ஜனாதிபதி கோரும்போது, அத்தகைய அவதானிப்புகளைக் கோரும் தேதியிலிருந்து ஒரு வாரகாலப் பகுதியினுள், அத்தகைய நியமனங்களுக்காக அவரினால் முன்மொழியப்பட்ட ஆட்கள் பற்றிய பேரவையின் அவதானிப்புகளைச் சபாநாயகரின் மூலம் தனக்கு அறிவிக்கும்படி பேரவையை அவர் தேவைப்படுத்துதல் வேண்டும்.<br><br>(ஆ) பேரவை உபபந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் அதனது அவதானிப்புகளை ஜனாதிபதிக்கு அறிவிக்கத் தவறினால், ஜனாதிபதி மேற்கூறப்பட்ட நியமனங்களைச் செய்வதற்கு முற்படுதல் வேண்டும்.<br><br>**உறுப்புரை 41அ (11)- வாசகம் 6**<br><br>பேரவையின் அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையானது சபாநாயகரால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும். | அரசியலமைப்பு பேரவையானது ஒருமித்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பெருமுயற்சி செய்ய வேண்டும். அத்தகைய எத்தேவைப்பாடும் பாராளுமன்றப் பேரவை மீது விதிக்கப்படவில்லை.<br><br>ஒருமித்தபோக்கு இல்லாதபோது, அரசியலமைப்பு பேரவையின் தீர்மானங்கள் குறைந்தது ஐந்து உறுப்பினர்களினால் ஆதரிக்கப்பட வேண்டும். அத்தகைய எத்தேவைப்பாடும் பாராளுமன்றப் பேரவை மீது விதிக்கப்படவில்லை.<br><br>கூட்டத்தின் தவிசாளருக்கு அரசியலமைப்பு பேரவையில் மூலவாக்கு காணப்படாது.<br><br>பாராளுமன்றப் பேரவை கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இல்லை. ஆகவே, எந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களும் சந்தித்து "அவதானிப்புக்களை" வழங்குவதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளலாம். |

## அமைச்சரவை அமைச்சர்கள் மீதான ஜனாதிபதியின் அதிகாரங்களின் அதிகரிப்பு

| அமைச்சரவை அமைச்சர்களும் அவர்களுக்கான விடயப்பொருட்கள் மற்றும் பணிகளும் | அமைச்சரவை அமைச்சர்களும் அவர்களுக்கான விடயப்பொருட்கள் மற்றும் பணிகள் | |
|---|---|---|
| **உறுப்புரை 43**<br><br>(1) ஜனாதிபதி காலத்துக்குக் காலம் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுமிடத்து, அமைச்சரவையின் அமைச்சர்களினதும், அமைச்சுக்களதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப்படவுள்ள பணிகளையும், விடயங்களையும் தீர்மானித்தல் வேண்டும்.<br><br>(2) ஜனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.<br><br>(3) ஜனாதிபதி எந்நேரத்திலும் அமைச்சரவையின் விடயங்களதும் பணிகளதும் குறித்தொதுக்குதல்களையும், அமைப்பையும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் இடையறாத் தொடர்ச்சியையும் பாராளுமன்றத்துக்கு அதற்குள்ள பொறுப்புடைமையின் இடையறா | **உறுப்புரை 44**<br><br>(1) ஜனாதிபதி காலத்துக்குக் காலம், பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன்,–<br><br>(அ) அமைச்சரவையின் அமைச்சர்களினதும் அமைச்சுக்களினதும் எண்ணிக்கை பற்றியும் அத்தகைய அமைச்சர்களுக்கு விடயங்களையும் பணிகளையும் குறித்தளிப்பது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும் அத்துடன்,<br><br>(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாயிருப்பதற்கெனப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.<br><br>(2) ஜனாதிபதி தமக்கென்று எவ்விடயத்தையும் அல்லது எப்பணிகளையும் குறித்தளிக்கலாம் என்பதுடன் இவ்வுறுப்புரை யின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது 45 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், எவரேனும் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படாத ஏதேனும் விடயத்திற்கு அல்லது பணிக்குப் பொறுப்பாக இருத்தலும் வேண்டும் அத்துடன், அந்நோக்கத்திற்கென, தமது பொறுப்பில் இருக்க | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் ஆகிய இரண்டின்கீழும், அமைச்சுக்களின் எண்ணிக்கையினை மற்றும் அவற்றுக்கு கீழ்வருகின்ற விடயப்பொருட்கள் மற்றும் பணிகளை **பிரதமருடனான கலந்தாலோசனை அவசியமானது என ஜனாதிபதி கருதுகின்ற பட்சத்தில் அவருடனான கலந்தாலோசனையுடன்** ஜனாதிபதி தீர்மானிக்க முடியும்.<br><br>எவ்வாறெனினும், தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களாக நியமிக்கப்படவேண்டியவர்கள் தொடர்பில் தீர்மானிக்கின்றபோது, ஜனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே செயற்பட **வேண்டும்**. உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ் ஜனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையினைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.<br><br>மிக முக்கியமான வேறுபாடு யாதெனில், தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பில் ஜனாதிபதி அவருக்கான அமைச்சுக்களை ஒதுக்கிக்கொள்வதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. (இதற்கான விதிவிலக்கு 19 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நிலைமாற்ற ஏற்பாடொன்றாகும். இவ் ஏற்பாட்டின் |

| | | |
|---|---|---|
| தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.<br><br>**19 ஆவது திருத்தத்தில் உள்ள நிலைமாற்ற ஏற்பாடுகள்**<br><br>**19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரிவு 51**<br><br>அரசியலமைப்பில் எது எவ்வாறு முரணாக இருப்பினும், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று ஜனாதிபதியாக பதவி வகிக்கின்ற ஆள் அவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் வரை, பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் என்னும் விடயங்கள் மற்றும் பணிகளைத் தமக்குக் குறித்தொதுக்கலாம் என்பதுடன், அந்நோக்கத்துக்காக அவரது பொறுப்பில் இருக்கவேண்டிய அமைச்சுக்களையும் தீர்மானிக்கலாம். அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அத்தகைய விடயம் அல்லது பணி எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கான ஏதேனும் குறிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கும்போது அதனை ஜனாதிபதிக்கான குறிப்பீடாக வாசித்து பொருள் கொள்ள வேண்டும். | வேண்டிய அமைச்சுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய விடயம் அல்லது பணி குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் பற்றி அரசியலமைப்பில் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் உள்ள குறிப்பெதுவும் ஜனாதிபதி பற்றிய குறிப்பீடாக வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.<br><br>(3) ஜனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட விடயங்களையும் பணிகளையும் அமைச்சரவையின் அமைப்பையும் எந்நேரத்திலும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் இடையறாத் தொடரச்சியையும் பாராளுமன்றத்தின்பால் அதற்குள்ள பொறுப்பின் இடையறாத தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது. | பிரயோகமும் தற்போதைய ஜனாதிபதியின் தெரிவிற்கு பின்னர் முடிவுறுத்தப்பட்டது). உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், ஜனாதிபதி அவருக்கென எவ்விடயப்பொருளினையும் அல்லது பணியினையும் ஒதுக்கிக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிகமாக எந்தவொரு அமைச்சருக்கும் ஒதுக்கப்படாத விடயப்பபொருள் மற்றும் பணிக்கு பொறுப்புடையவராக இருக்க முடியும். |
| **அமைச்சரவை அமைச்சர்களாக இல்லாத அமைச்சர்கள்**<br><br>**உறுப்புரை 44**<br><br>(1) ஜனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது, பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களை | **அமைச்சரவை அமைச்சர்களாக இல்லாத அமைச்சர்கள் மற்றும் அவர்களுடைய அமைச்சுக்கள், விடயப்பொருட்கள் மற்றும் பணிகள்**<br><br>**உறுப்புரை 45**<br><br>(1) ஜனாதிபதி காலத்துக்குக் காலம், பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், ஜனாதிபதி அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்களை நியமிக்கின்றபோது பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நியமிக்கலாம்.<br><br>(2) ஜனாதிபதி அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அத்தகய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்கவேண்டிய அமைச்சுக்களின் விடயங்களதும் மற்றும் பணிகளதும், ஏதேனுமிருப்பின், குறித்தொதுக்குதல்களைத் தீர்மானிக்கலாம்.<br><br>(3) ஜனாதிபதி இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்குதலை எந்த நேரத்திலும் மாற்றலாம்.<br><br>(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதல் வேண்டும்.<br><br>(5) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அமைச்சரவை அமைச்சரல்லாத எவரேனுமொரு அமைச்சருக்கு கையளிக்கலாம். அத்துடன், எந்த எழுத்திலான சட்டத்தினால் குறிப்பிட்ட அதிகாரம் அல்லது கடமை அமைச்சரவை அமைச்சருக்கு அளிக்கப்பட்டதோ அல்லது | அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன்,—<br><br>(அ) பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சரவையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கலாம் அத்துடன்<br><br>(ஆ) அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்கள், பணிகள் என்பவற்றைக் குறித்தளித்தலையும், அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பிலிருக்க வேண்டிய அமைச்சுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் தீர்மானிக்கலாம்.<br><br>(2) ஜனாதிபதி, இவ்வுறுப்புரையின், (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தை அல்லது குறித்தளித்தலை எந்த நேரத்திலும் மாற்றலாம்.<br><br>(3) இவ்வுறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒவ்வொருவரும் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாயிருத்தலும் மறுமொழி கூறற்பாலராய் இருத்தலும் வேண்டும்.<br><br>(4) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அமைச்சரவை அமைச்சரல்லாத எவரேனுமொரு அமைச்சருக்கு கையளிக்கலாம். | உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், **பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதென ஜனாதிபதி கருதுகின்றபட்சத்தில்** ஜனாதிபதி பிரதம அமைச்சரை கலந்தாலோசிக்கலாம்.<br><br>தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், ஜனாதிபதி விடயப்பொருட்கள் மற்றும் பணிகளின் குறித்தொதுக்கல்களில் மாற்றங்களைச் செய்யலாம். ஆனால், உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், ஜனாதிபதி அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்களின் நியமனத்தினையும் மாற்ற இயலும்.<br><br>தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்கள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்புகூற மாத்திரமே கடமைப்பட்டுள்ளனர். ஆனால், உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், அவர்கள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்பு கூறவும் மற்றும் பதிலளிக்கவும் கடமைப்பட்டுள்ளனர். |

| | | |
|---|---|---|
| சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் கீழ் அந்தத் தத்துவம் அல்லது கடமை வழங்கப்பட்ட அத்தகைய அமைச்சரவை அமைச்சரல்லாத அமைச்சர் இப்பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் சட்டமுறையானதாதல் வேண்டும். | அத்துடன், எந்த எழுத்திலான சட்டத்தினால் குறிப்பிட்ட அதிகாரம் அல்லது கடமை அமைச்சரவை அமைச்சருக்கு அளிக்கப்பட்டதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் கீழ் அந்தத் தத்துவம் அல்லது கடமை வழங்கப்பட்ட அத்தகைய வேறு அமைச்சர் இப்பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் சட்டமுறையானதாதல் வேண்டும். | |
| **பிரதி அமைச்சர்கள்**<br><br>**உறுப்புரை 45**<br><br>(1) ஜனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது, அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.<br><br>(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அவருடைய பிரதி அமைச்சருக்கு கையளிக்கலாம். அத்துடன், எந்த எழுத்திலான சட்டத்தினால் குறிப்பிட்ட | **பிரதி அமைச்சர்கள்**<br><br>**உறுப்புரை 46**<br><br>(1) ஜனாதிபதி, காலத்துக்குக் காலம், பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன், அமைச்சரவையின் அமைச்சர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு உதவுவதற்கெனப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.<br><br>(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் விடயம் அலலது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், ஜனாதிபதி பிரதி அமைச்சர்களை நியமிக்கின்றபோது பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் செயற்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றார். ஆனால், உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், **பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதென ஜனாதிபதி கருதுகின்றபட்சத்தில்** ஜனாதிபதி பிரதம அமைச்சரை கலந்தாலோசிக்க வேண்டிய தேவை மட்டுமே உள்ளது. |

| | | |
|---|---|---|
| அதிகாரம் அல்லது கடமை அமைச்சரவை அமைச்சருக்கு அளிக்கப்பட்டதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் கீழ் அந்தத் தத்துவம் அல்லது கடமை வழங்கப்பட்ட அத்தகைய பிரதி அமைச்சர் இப்பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை பிரயோகிப்பதும் புரிவதும் சட்டமுறையானதாதல் வேண்டும். | மூலம் தமது பிரதியமைச்சருக்குக் கையளிக்கலாம். அத்துடன், அந்தத் தத்துவம் அல்லது கடமை அமைசசரவையின் அத்தகைய அமைச்சருக்கு எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இப்பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிப்பதும் நிறைவேற்றுவதும் அவருக்குச் சடடமுறையானதாதல் வேண்டும். | |
| **பிரதம அமைச்சரின் பதவிக்காலம் மற்றும் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிக்காலம் மீதான மட்டுப்பாடு**<br><br>**உறுப்புரை 46**<br><br>(1) (அ) அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முப்பதை விஞ்சுதலாகாது அத்துடன்<br><br>(ஆ) அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும், கூட்டு மொத்த எண்ணிக்கை நாற்பதை விஞ்சுதலாகாது.<br><br>(2) பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து செயற்படும் காலம் முழுவதும் பிரதம அமைச்சர் தொடர்ந்தும் பதவியில் இருப்பார் | **பிரதம அமைச்சர், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவிக்காலம்**<br><br>**உறுப்புரை 47**<br><br>பிரதம அமைச்சர், அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது வேறு எவரேனும் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர்-<br><br>(அ) ஜனாதிபதியின் கைப்பட எழுதப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய<br><br>(ஆ) ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது<br><br>(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லா தொழிந்தாலொழிய,<br><br>அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் | **அமைச்சர்களின் எண்ணிக்கை மீதான மட்டுப்பாடுகள்**<br><br>தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், அமைச்சர்களின் எண்ணிக்கை (30), அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை (மொத்தமாக 40) தொடர்பில் மட்டுப்பாடுகள் உள்ளன. இதற்கான விதிவிலக்காக, தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படுகின்றபோது அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பில் பாராளுமன்றம் தீர்மானித்தல் வேண்டும்.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், **அத்தகைய எவ்விதமான மட்டுப்பாடுகளும்** இல்லை. |

| | | |
|---|---|---|
| (அ) ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறத்தல் அல்லது<br><br>(ஆ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிதல்.<br><br>(3) பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து செயற்படும் காலம் முழுவதும், அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் அல்லது அமைச்சரவை உறுப்பினரல்லாத ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்:-<br><br>(அ) பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அவர் ஜனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப்பட்டிருத்தல் அல்லது<br><br>(ஆ) ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறத்தல் அல்லது<br><br>(இ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிதல்.<br><br>(4) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் உள்ளது எது எப்படியிருப்பினும், பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குமிடத்து, அமைச்சரவை அமைச்சர்களது | அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேணடும். | **பிரதம அமைச்சரை நீக்குதல்**<br><br>தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், பிரதம அமைச்சர் ஜனாதிபதியால் நீக்கப்படமுடியாது. பிரதம அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தால் அல்லது அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்த்து முடிவுறுத்தப்பட்டா**லொழிய** அமைச்சரவை செயற்படுகின்ற காலம் முழுவதும் அவர் அவருடைய பதவியினைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், ஜனாதிபதியால் நீக்கப்பட முடியும் என்பது உள்ளடங்கலாக ஏனைய அமைச்சர்களை நீக்குவது தொடர்பான அதே ஏற்பாடுகளே பிரதம அமைச்சரை நீக்குவது தொடர்பிலும் ஏற்பாகின்றன.<br><br>**அமைச்சர்கள், அமைச்சரவை அமைச்சர்களல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் நீக்கம்**<br><br>தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், அனைத்து வகையான அமைச்சர்களும் அவர்கள் இராஜினாமா செய்யும் வரை அல்லது பாராளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்த்து முடிவுறுத்தப்படுகின்ற வரை அல்லது **பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நீக்கப்படுகின்ற வரை** தொடர்ந்தும் பதவி வகித்தல் வேண்டும்.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், பிரதம அமைச்சர் உள்ளடங்கலாக எந்தவொரு அமைச்சரையும் ஜனாதிபதி தன்னிச்சையாக நீக்க முடியும். |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கையும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களின் எண்ணிக்கையும், பிரதி அமைச்சர்களது எண்ணிக்கையும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(5) பந்தி (4) இன் நோக்கங்களுக்காக "தேசிய அரசாங்கம்" என்பது, பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழு, பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்களுடன் இணைந்து உருவாக்கும் ஓர் அரசாங்கமேயாகும். | | (எவ்வாறெனினும், இது உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 43(3) இற்கு அமைவானது. இவ் உறுப்புரையானது பாராளுமன்றத்தின் நம்பிக்கையினைப் பெற்றுள்ளவர் என ஜனாதிபதி அபிப்பிராயப்படுகின்ற ஒருவரை பிரதம அமைச்சராக நியமிக்க வேண்டும் என ஜனாதிபதியினைத் தேவைப்படுத்துகின்றது) |
| **பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை**<br><br>**உறுப்புரை 47**<br><br>(1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றுதலை நிறுத்துதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 46 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் உபபந்தி (அ) இல் அல்லது (3) ஆம் பந்தியின் உபபந்தி (அ) அல்லது (ஆ) இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக அவர்களுடைய பதவி முடிவுறுத்தப்படுகின்றவரையில் அத்தகைய அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் தேர்தல் ஆணையாளரால் | **பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அமைச்சரவை**<br><br>**உறுப்புரை 48**<br><br>(1) பாராளுமன்றத்தின் கலைப்புக்கு நேர் முனனர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் பணியாற்றுதலை நிறுத்துதலும் வேண்டும். அதற்கிணங்க, பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், வேறு அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும், 47 ஆம் உறுப்புரையின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாகப் பதவி வகிக்காதொழிந்தால் ஒழிய, தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.<br><br>(2) பாராளுமன்றத்தின் கலைப்புக்கும் பொதுத் | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பானது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளபோது அமைச்சரவையானது பொதுத் தேர்தல் முடிவுறுகின்றவரை செயற்பட வேண்டுமெனவும் அக்காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற கட்டளைவிதிகளுக்கு இணங்கி **நடக்க வேண்டுமென்றும்** பொதுத் தேர்தலில் முறையற்ற செல்வாக்கினை பிரயோகிக்க கூடாதெனவும் வெளிப்படையான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இவ்வெளிப்படையான ஏற்பாடு 20 ஆவது திருத்தத்தில் **நீக்கப்பட்டுள்ளது.**<br><br>பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் |

கொடுக்கப்படும் கட்டளைக்கற்களுடன் இணங்கியொழுகுதலும் மற்றும் தேர்தலின் போது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிக்காது இருத்தலும் வேண்டும்.

(2) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்தாலோ, பதவியிலிருந்து அகற்றப்பட்டாலோ அல்லது பதவியை துறந்தாலோ எதுவாயினும், அமைச்சரவையானது, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். ஜனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறந்தாலோ, பதவியிலிருந்து அகற்றப்பட்டாலோ அல்லது பதவியை துறந்தாலோ எதுவாயினும், ஜனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும்

தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது, பிரதம அமைச்சர் இறந்தமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியைத் துறந்தமை எதுவாயினும், அமைச்சரவையானது ஏனைய அமைச்சரவை அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு பொதுத் தேரதல் முடிவுறும் வரை தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும் நிறைவேற்றவும் புரியவும் என அத்தகைய அமைச்சர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கலாம், அல்லது அவற்றைத் தாமே பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம். அத்தகைய வேறு அமைச்சர் எவரும் இல்லாவிடின், பொதுத் தேர்தல் முடிவடையும்வரை அமைச்சரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஜனாதிபதி தாமே பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.

(3) பாராளுமன்றக் கலைவுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் அல்லது வேறெவரேனும் அமைச்சர் இறந்தால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது பதவியைத் துறந்தால், ஜனாதிபதி, அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும் நிறைவேற்றவும் புரியவும் என வேறெவரேனும் அமைச்சரை நியமிக்கலாம் அல்லது தாமே அந்த அமைச்சின் பொறுப்பை ஏற்கலாம், அல்லது அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கலாம்,

இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்தாலோ, பதவியிலிருந்து அகற்றப்பட்டாலோ அல்லது பதவியை துறந்தாலோ எதுவாயினும், வேறு ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கென நியமிக்கின்ற அதிகாரத்தினை தற்போதைய அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது (உறுப்புரை 47(2)). எவ்வாறெனினும், உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ் அத்தகைய வேறு அமைச்சர் ஒருவர் இல்லாதவிடத்து ஜனாதிபதியே பிரதம அமைச்சரின் கடமைகள் மற்றும் பணிகளை ஆற்றலாம்.

அதேபோல, அமைச்சரொருவர் இறந்தாலோ அல்லது நீக்கப்பட்டாலோ அல்லது இராஜினாமா செய்தாலோ அவ் அதிகாரங்களை ஜனாதிபதி பிரயோகிக்க இயலுமென உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தமானது ஏற்பாடு செய்கின்றது.

| | | |
|---|---|---|
| அமைச்சரை நியமிக்கலாம். | நிறைவேற்றலாம், அத்துடன் புரியலாம். | |
| **பதில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்**<br><br>**உறுப்புரை 49**<br><br>அமைச்சரவையின் ஓர் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் அவருடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும் போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், அமைச்சரவையின் உறுப்பினரொருவரல்லாத அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென ஜனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம். | **பதில் அமைச்சர் மற்றும் பதில் பிரதி அமைச்சர்**<br><br>**உறுப்புரை 50**<br><br>அமைச்சரவையின் ஓர் அமைச்சர், வேறு அமைச்சர் அல்லது பிரதியமைச்சர், தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும் போது, சொல்லப்பட்ட அமைச்சரவை அமைச்சரின், வேறு அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் உறுப்பினர் எவரையும் நியமிக்கலாம். | தற்போது வலுவிலுள்ள அரசியலமைப்பின்கீழ், பதில் அமைச்சர்களை நியமிக்கின்றபோது ஜனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் செயற்பட வேண்டும். எவ்வாறெனினும், இத்தேவைப்பாடு உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ் இல்லாமல் போயுள்ளது. |
| **பிரதம அமைச்சரின் செயலாளர்**<br><br>**உறுப்புரை 51**<br><br>(1) பிரதம அமைச்சருக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.<br><br>(2) செயலாளர், பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புக்களுக்கமைய அவரது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் | **அமைச்சின் செயலாளர்கள்**<br><br>**உறுப்புரை 52**<br><br>(1) ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(2) அமைச்சின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களினதும் அல்லது வேறு நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல் | உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், பிரதம அமைச்சருக்கான செயலாளர் தொடர்பில் எவ்வித தனியான ஏற்பாடுகளும் இல்லை.<br><br>உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 52(4) ஆனது அமைச்சரவை அமைச்சர்கள் செயலாளர் என்ற பதவிநிலையிலிருந்து முடிவுறுத்தப்பட்ட நபரை பகிரங்க சேவையிலுள்ள வேறேதேனும் பதவி நிலைக்கு |

| | | |
|---|---|---|
| வேண்டும்.<br><br>**அமைச்சுக்களின் செயலாளர்கள்**<br><br>**உறுப்புரை 52**<br><br>(1) அமைச்சரவை அமைச்சரின் ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(2) அமைச்சின் செயலாளர் அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களை அல்லது வேறு நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் வேண்டும்.<br><br>(3) ஓர் அமைச்சின் செயலாளர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படும்போது அல்லது ஜனாதிபதியினால் அரசியலமைப்பின் 43 ஆம் அல்லது 44 ஆம் உறுப்புரையின் கீழ் தீர்மானமொன்றை மேற்கொள்ளப்பட்டு அதன்விளைவாய் அமைச்சின் இருப்பு முடிவுறுத்தப்படுகின்றபோது தனது பதவியை வகியாதொழித்தல் வேண்டும்.<br><br>(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, ஜனாதிபதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம், கணக்காய்வாளர் - நாயகத்தின் அலுலகம், பாராளுமன்ற குறைகேள் அதிகாரியின் (ஓம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ | வேண்டும்.<br><br>(3) ஓர் அமைச்சின் செயலாளர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவதன் மேல், அல்லது 44 ஆம் உறுப்புரையின் கீழ் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியினாற் செய்யப்படுவதும் அந்த அமைச்சினை இல்லாதொழிக்கின்றதும் ஆன ஒரு தீர்மானம் செய்யப் பட்டதன் மேல் செயலாளர் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.<br><br>(4) ஓர் அமைச்சின் செயலாளர் அவ்வாறு பதவி வகிக்காதொழியுமிடத்து, அமைச்சரவை அத்தகைய செயலாளரை, பகிரங்க சேவையிலுள்ள வேறேதேனும் பதவிக்கு நியமிக்கலாம்:<br><br>ஆயின், செயலாளராக நியமிக்கப்படுவதற்கு நேர் முன்னராக, பகிரங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத் தாபனத்தின் சேவையில் இருந்த ஆளொருவர், அத்தகைய சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக் கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் செயலாளர் பதவியை அவ்வாறு வகிக்காதொழிந்ததன் மேல் அவரது முதுமுறையை இழக்காது அத்தகைய சேவையில் அவர் வகித்த பதவியை மீளவகிப்பதற்கு உரித்துடையவராதலும் வேணடும் .<br><br>(5) இவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்திக்கான காப்புவாசகம் அமைச்சு ஒன்றின் செயலாளர் ஒருவருக்கு | நியமிப்பதனை அனுமதிக்கின்றது.<br><br>செயலாளராக நியமிக்கப்படுவதற்கு உடனடி முன்பதாக பகிரங்க அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது பொதுக் கூட்டுத்தாபன சேவையில் பணியாற்றிய ஒரு நபர் அத்தகைய சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டவராய் கருதப்படல் வேண்டும் என்பதுடன் செயலாளர் என்ற அவருடைய பதவி நிலை முடிவுறுத்தப்படுகின்றபோது தனது பணிமூப்பு நிலைக்கு எவ்வித குந்தகமுமின்றி அத்தகைய பகிரங்க சேவையில் மீண்டும் இணைந்து கொள்ள முடியும்.<br><br>பகிரங்க அலுவலகங்களாக கருதப்படாதவற்றின் பட்டியல் உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ் மாற்றப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்கத் திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும். | (அ) ஒழுக்காற்றுக் காரணங்களுக்காகப் பதவி விலக்கல் தவிர்ந்த வேறு வகையில் அத்தகைய ஆளின் சேவைகளை ஜனாதிபதி முடிவுறுத்தியதன் மேல் அல்லது<br><br>(ஆ) அவர் பதவிதுறக்கும் தேதியன்று அவருக் கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறாதிருந்தாலொழிய அல்லது அவருக்கெதிராக அந்நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசமிருந்தாலொழிய, அவர் பதவிதுறந்ததன்மேல், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.<br><br>(6) இவ்வுறுப்புரையின் (4) ஆம், (5) ஆம் பந்திகளின் நோக்கங்களுக்கென, ஜனாதிபதியின் செயலாளர் பதவியை, அமைச்சு ஒன்றின் செயலாளர் பதவியை அல்லது ஜனாதிபதியின் பணியாட்டொகுதியிலுள்ள ஏதேனும் பதவியை அல்லது அத்தகைய பதவிகளில் ஏதேனும் ஒன்றோ பலவோவாய பதவிகளை தொடர்ந்து வகித்துள்ளவரான எவரேனுமாள், கடைசியாக எந்தப் பதவியை வகித்தாரோ அந்தப் பதவியைத் தொடர்ந்து வகித்தவராகக் கருதப்படுதல் வேண்டும். | |

| பாராளுமன்றத்திற்கான மாற்றங்கள் | | |
|---|---|---|
| **அரசியலமைப்பின் உறுப்புரை 70(1)**<br><br>ஜனாதிபதி கீழ்வருவனவற்றிற்கு அமைய பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்:<br><br>➢ பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் இடம்பெற்ற திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர்<br>○ மூன்றிலிரண்டுக்குக் குறையாத பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானமொன்றை நிறைவேற்றி பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியை வேண்டினால்.<br>➢ பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் இடம்பெற்ற திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள் முடிவுற்ற பின்னர்<br><br>ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பில் எந்த நேரத்திலும் கலைக்கலாம். | **20 ஆவது திருத்தத்தின் 14 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 70(1) இனை நீக்கி, பின்வருவனவற்றைப் பதிலீடு செய்கின்றது:**<br><br>1) ஜனாதிபதி, காலத்துக்குக் காலம் பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்:<br>எவ்வாறெனினும் –<br>(அ) (ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாகப் பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட்டுள்ளபோது, அத்தகைய பொதுத்தேர்தற் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி முடிவடைய முன்னர், பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பாராளுமன்றம் தீர்மானமொன்றின் மூலம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய, ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாகாது.<br><br>(ஆ) பொதுத் தேர்தலொன்றின் பின்னர் வரும் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் தொடக்கத்தின்போது அரசக்கொள்கைக் கூற்று நிராகரிக்கப்பட்டதன்மேல் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் ஆகாது.<br><br>(இ) உட்பந்தி (ஈ) இன் ஏற்பாடுகளுக்கமைவாக, 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகும் தீர்மானமொன்றைச் சபாநாயகர் ஏற்றுக்கவனித்த | உத்தேசிக்கப்பட்டத் திருத்தத்தின்கீழ், குறிப்பிட்ட மட்டுப்பாடான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்து ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும், பொதுத் தேர்தல் இடம்பெற்று ஒருவருட காலப்பகுதிக்கு பின்னர் எந்நேரத்திலும் எப்போது பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என தீர்மானிக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.<br><br>இது (ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் அமைச்சராக நியமிக்கலாம் மற்றும் எத்தனை அமைச்சர்களையும் நியமிக்கலாம் என்ற அதிகாரங்களுடன் இணைந்து) ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தின்மீது காணப்படுகின்ற அதிகாரங்களை/ கட்டுப்பாட்டினை அதிகரிக்கின்றது.<br><br>பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானமொன்றினூடாக பாராளுமன்றத்தை எந்நேரத்திலும் கலைக்கும்படி ஜனாதிபதியினைக் கோர முடியும். இத்தீர்மானத்திற்கு சாதாரண பெரும்பான்மை இருந்தால் போதுமானது. |

| | | |
|---|---|---|
| | பின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது: அதாவது –<br><br>(i) 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டாதிருந்தாலொழிய<br>(ii) ஜனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராகவில்லை என அல்லது அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச்சார்த்தல்கள் எவற்றுக்கும் ஜனாதிபதி குற்றவாளியாக இருக்கவில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்து அறிக்கை செய்தாலொழிய<br>(iii) ஜனாதிபதியை அகற்றுவதற்கான விளைவுத் தீர்மானம், 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக நிறைவேற்றப்படாதிருந்தாலொழிய அல்லது<br>(iv) பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலமாக வேண்டினாலொழிய,<br>ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது.<br><br>(ஈ) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பாராளுமன்றம் நிராகரித்ததன் விளைவாக ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்காதுள்ளவிடத்து அடுத்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பாராளுமன்றம் நிராகரித்தால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் வேண்டும். | |

| | | |
|---|---|---|
| **அரசியலமைப்பின் உறுப்புரை 91(1)(ஈ)(xiii)**<br><br>உறுப்புரை 92 (ஆ) இற்கமைய இரட்டை குடியுரிமையைக் கொண்டிருக்கும் நபர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவர்களாகின்றனர். இந்த ஏற்பாடு இரட்டை குடிமகனாக இருக்கும் ஒருவரை குடியரசின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்தும் தகுதி நீக்கம் செய்கிறது. | **20 ஆவது திருத்தத்தின் 17 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 91(1)(ஈ)(xiii) இனை நீக்குகின்றது.** | இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்கள் பாராளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படமாட்டார்கள். |
| **சட்டவாக்கச் செயன்முறையில் ஏற்பட்டுள்ள தாக்கம்** | | |
| **உறுப்புரை 78(1)**<br><br>சட்டமூலம் ஒவ்வொன்றும் ஆகக்குறைந்தது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுவதற்கு **பதினான்கு நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.** | **20 ஆவது திருத்தத்தின் 15(1) ஆம் வாசகம் உறுப்புரை 78(1) இனை நீக்கி பின்வருமாறு பதிலீடு செய்கின்றது:**<br><br>ஒவ்வொரு சட்டமூலமும், அது பாராளுமன்றத்தின் ஒழுங்குபத்திரத்தில் இடப்படுவதற்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் | உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தமானது சட்டமூலமொன்று பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படுவதற்கு முன்னர் அதனை பொது மக்கள் அணுகுவதற்கான (வர்த்தமானியில் வெளியிடப்படுவதனூடாக) **காலத்தின் அளவை** (14 நாட்களிலிருந்து 7 நாட்களுக்கு) **குறைக்கின்றது**. |
| | **20 ஆவது திருத்தத்தின் 15(2) ஆம் வாசகம் உறுப்புரை 78(3) இனை புதிதாக சேர்க்கின்றது**<br><br>"பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றுக்கு முன்மொழிவு செய்யப்படும் ஏதேனும் திருத்தம் அத்தகைய சட்டமூலத்தின் தகைமைகள் மற்றும் கொள்கைகளிலிருந்து விலகுதலாகாது" | உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தமானது சட்டமூலங்களுக்கு மிக பரந்தளவான குழு நிலை திருத்தங்களை (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இக்குழு நிலை திருத்தங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக விமர்சித்து வந்துள்ளது) மேற்கொள்வதற்கு எதிராக மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| "அவசர மசோதாக்கள்" என்று சட்டத்தை இயற்றுவதற்கு அரசியலமைப்பு அரசாங்கத்தை **அனுமதிக்கவில்லை.** | **20 ஆவது திருத்தத்தின் 27 ஆம் வாசகம் உறுப்புரை 122 இனை புதிதாக சேர்க்கின்றது**<br><br>(1) அமைச்சரவையின் கருத்துப்படி தேசிய அக்கறைக்கு அவசரமாகவுள்ளதும் அமைச்சரவைச் செயலாளரின் கைப்பட அப்பொருள்பட புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான சட்டமூலமொன்றின் விடயத்தில்,–<br><br>(அ) 78 (1) ஆம் உறுப்புரையினதும் 121 ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, எந்த ஏற்புடைமையையும் கொண்டிருத்தலாகாது<br><br>(ஆ) ஜனாதிபதி, பிரதம நீதியரசருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலானவொரு குறிப்பீட்டின் மூலம், சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாகவுள்ளதாவென்பது பற்றி உயர் நீதிமன்றத்தின் விசேட தீர்மானத்தைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய குறிப்பீட்டின் பிரதியொன்று அதே நேரத்தில் சபாநாயகருக்கு வழங்கப்படுதல் வேண்டும்<br><br>(உ) உயர் நீதிமன்றமானது, நீதிமன்றம் கூடுவதிலிருந்து <u>**இருபத்தி நான்கு மணித்தியாலங்களினுள் (அல்லது ஜனாதிபதி குறித்துரைக்கக் கூடியவாறு மூன்று நாட்களை விஞ்சாத அத்தகைய நீட்டிய காலப்பகுதியினுள்)**</u> அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அதன் தீர்மானத்தைச் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் மட்டுமே அறிவித்தலும் வேண்டும்.. | எத்தனிக்கின்றது.<br><br>எவ்வாறெனினும், பாராளுமன்றத்தில் அத்தகைய குழு நிலை திருத்தங்களை ஏதெனுமொரு முறையில் <u>**நீதிமுறை மீளாய்வு**</u> செய்வதற்கான பரப்பொன்று இன்மையினால் இப்பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான பொறிமுறை எதுவும் இல்லை.<br><br>"தேசிய அக்கறை தொடர்பாக அவசரமானது" என அமைச்சரவையினால் உறுதிப்படுத்தப்படுகின்ற ஏதெனுமொரு சட்டமூலத்தினை ஜனாதிபதி நேரடியாக உச்சநீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துவதனை இத்திருத்தம் அனுமதிக்கின்றது. உச்ச நீதிமன்றமானது குறிப்பிட்ட சட்டமூலத்தின் அரசியலமைப்புதன்மை தொடர்பில், <u>**ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய,**</u> 24 மணித்தியாலங்களுக்குள் அல்லது 72 மணித்தியாலங்களுக்குள் தீர்மானிக்க வேண்டிய பணியினைக் கொண்டுள்ளது.<br><br>"அவசர சட்டமூலங்களை" வர்த்தமானியிலிடுவதற்கான எவ்விதத் தேவைப்பாடும் இல்லை. இது அத்தகைய சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அவற்றின் உள்ளடக்கங்களை |

| | | |
|---|---|---|
| | (2) உறுப்புரை 121 இன் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டமூலத்துக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.<br><br>(3) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டின் திருத்தம், நீக்கிவிடுதல் மற்றும் மாற்றீடு செய்தல், திருத்தியமைத்தல் மற்றும் அல்லது சேர்த்தலுக்கான அல்லது அரசியலமைப்பை நீக்கிவிடுதல் மற்றும் மாற்றீடு செய்தலுக்கான ஏதேனும் சட்டமூலத்திற்கு ஏற்புடையதாதலாகாது. | பிரஜைகள் அறிந்துகொள்ளக்கூட முடியாத நிலைக்கு வழிவகுக்கும்.<br><br>அத்தகைய நடவடிக்கை முறைகளில் பிரஜைகளுக்கு "கேட்கப்படுவதற்கான உரிமை" **இல்லை**. நீதிமன்றம் அவசியமானதெனக் கருதின், அதனடிப்படையில், குறிப்பிட்ட நபருடைய கேட்கப்படுவதற்கான உரிமையினை அனுமதிக்கலாமா என்பதனை உச்ச நீதிமன்றம் தீர்மானிக்க முடியும். (அரசியலமைப்பின் 134 ஆவது உறுப்புரை)<br><br>எவ்வாறெனினும், அரசியலமைப்பு திருத்தங்கள் அல்லது ஒரு புதிய அரசியலமைப்பு **அவசர சட்டமூலமாக நிறைவேற்றப்பட முடியாது**. ஆனால், நேரம் தொடர்பில் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையினால், அரசியலமைப்புக்கு முரணான சட்டமூலங்கள் சட்டமாக இயற்றப்படமுடியும். (உறுப்புரை 80(3)) |
| பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ள ஒரு சட்டமூலத்தை (அரசியலமைப்பு திருத்தமொன்றல்லாதது) ஜனாதிபதி சர்வசன வாக்கெடுப்பு முறையினூடாக மக்களிடம் சமர்ப்பிப்பதனை அரசியலமைப்பு **அனுமதிக்கவில்லை.** | **20 ஆவது திருத்தத்தின் 16 ஆம் வாசகம் உறுப்புரை 85(2) இனை புதிதாகச் சேர்க்கின்றது**<br><br>ஜனாதிபதி, அவரது தற்றுணிபின்படி, பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள (அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்குவதற்கான அல்லது திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் ஏற்பாட்டைச் சேர்ப்பதற்கான அல்லது | ஜனாதிபதி பாராளுமன்றத்தினைத் தவிர்த்து வேறு வழியினூடாக சட்டங்களை நிறைவேற்றுவதனை அனுமதிக்கின்றது. எவ்வாறெனினும், அறுதியான தீர்மானம் மக்களிடமே காணப்படும். |

| | | |
|---|---|---|
| | அரசியலமைப்பை நீக்கிவிட்டு மாற்றீடு செய்வதற்கான சட்டமூலமாக அல்லது அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாகவுள்ள சட்டமூலமாக இராத) ஏதேனும் சட்டமூலத்தை மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கலாம். | |
| **தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீதான தாக்கம்** | | |
| **அரசியலமைப்பின் உறுப்புரை 103**<br><br>**தேர்தல்கள் ஆணைக்குழு**<br><br>103 (1) தேர்தல்கள் ஆணைக்குழுவொன்று (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இருத்தல் வேண்டும். அது, ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாகம் அல்லது கல்விசார் துறைகளில் தமக்கென சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்ட ஆட்களிடையேயிருந்து, **<u>அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது</u>**, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். **<u>அங்ஙனம் நியமிக்கப்படும் உறுப்பினர்களில் ஒருவர் பிரதி தேர்தல்கள் ஆணையாளராக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியை வகித்தவரான தேர்தல்கள் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்</u>**. ஜனாதிபதி, **<u>அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்</u>** மீது உறுப்பினரொருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும். | **20 ஆவது திருத்தத்தின் 19 ஆம் வாசகம் உறுப்புரை 103(1) மற்றும் 103(7) ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது**<br><br>103 (1) ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாகம் அல்லது கல்வி என்ற துறைகளில் சிறப்பெய்தியுள்ள ஆட்களிலிருந்து ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளதும் (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) தேர்தல்கள் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். ஜனாதிபதி, அதன் தவிசாளராக ஓர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும். | தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் தொடர்பான பின்வரும் தேவைப்பாடுகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன:<br><br>➢ தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசு.<br>➢ தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பதற்காக ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு பேரவையினால் செய்யப்படுகின்ற சிபாரிசு.<br><br>➢ தேர்தல்கள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக அல்லது அதற்கு மேற்பட்ட பதவிநிலையொன்றினை வகித்து ஓய்வு பெற்ற ஒரு அதிகாரி உள்ளடக்கப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு |

| | | |
|---|---|---|
| **103 (7)** ஜனாதிபதி, உறுப்பினரொருவருக்கு இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு தொடர்பான கடமைகளைப் புரிவதிலிருந்து விடுமுறை வழங்கலாமென்பதுடன், அத்தகைய விடுமுறை காலப்பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமை பெற்ற ஆளொருவரை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கலாம். **<u>அத்தகைய ஒவ்வொரு நியமனமும் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது செய்யப்படுதல் வேண்டும்.</u>**<br><br>**அரசியலமைப்பின் உறுப்புரை 104ஆ (4) ஆனது** தேர்தல் பிரச்சார நோக்கங்களுக்காக பொது அல்லது அரசுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பயன்படுத்துவதை தடை செய்ய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்குகிறது.<br><br>**104ஆ (4) (அ)** தேர்தல் காலகட்டத்தில், அரசு அல்லது எந்தவொரு பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை பின்வரும் நோக்கத்திற்காக பயன்படுத்துவதை தடை செய்ய ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருக்கும்—<br><br>(i) தேர்தலை அல்லது அத்தகைய தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு அரசியல் கட்சி அல்லது சுயாதீன குழுவின் வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்திற்காக: | 103 (7) ஜனாதிபதி இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு தொடர்பான தமது கடமைகளைப் புரியாதிருப்பதற்கு உறுப்பினரொருவருக்கு விடுமுறை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய விடுமுறைக் காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கு, ஆணைக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரையும் நியமிக்கலாம்.<br><br>**20 ஆவது திருத்தத்தின் 20(1) ஆம் வாசகம்** உறுப்புரை 104ஆ (4)(அ)(i) இலுள்ள ‘‘தேர்தல் அல்லது ஏதேனும் அரசியல் கட்சியின் எவரேனும் வேட்பாளர்’’ என்பதனை ‘‘**<u>எவரேனும் வேட்பாளரின் அல்லது ஏதேனும் அரசியல் கட்சியின் தெரிவு</u>**’’ என்ற வார்த்தைகளினூடாக பதிலீடு செய்கின்றது. | தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற தற்காலிக நியமனங்களை இனிமேல் அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசின்பேரில் செய்ய வேண்டிய தேவை இல்லை.<br><br>ஆணைக்குழுவின் உள்ளடக்கம் மற்றும் ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் அரசியலமைப்பு நிலைப்பாட்டினை மீண்டும் 18ஆவது திருத்தத்தின் நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. |

| | | |
|---|---|---|
| | **20 ஆவது திருத்தத்தின் 20(2) ஆம் வாசகம்** உறுப்புரை 104ஆ (4)(அ)(i) இற்கு உடனடி பின்னதாக பின்வரும் ஏற்பாட்டினை உட்சேர்க்கின்றது:<br><br>(4அ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடத்துவதற்கான கட்டளையொன்றை ஆக்கும் தேதியன்று அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்தும்படி தேவைப்படுத்துகின்ற பிரகடனம் செய்யும் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதியின்போது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டி நெறியானது –<br><br>(அ) விடயத்துக்கேற்ப, முறையான தேர்தலை நடத்துவதுடன் அல்லது முறையான மக்கள் தீர்ப்பை நடத்துவதுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்<br><br>(ஆ) பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் கருமத்துடன் அல்லது அரசியலமைப்பின் கீழ்<br><br>நியமிக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவின் நிருவாக நோக்கெல்லைக்குள் உள்ள ஏதேனும் கருமத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருத்தலாகாது | தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்ட தேர்தலொன்றினை அல்லது சர்வசன வாக்கெடுப்பொன்றினை நடத்துவதுடன் நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ள விடயப்பொருட்கள் சார்ந்த வழிகாட்டிகளை மாத்திரமே வெளியிடமுடியும். தேர்தல்கள் ஆணைக்குழுவானது பகிரங்க சேவையுடன் அல்லது பகிரங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது நீதி சேவைகள் ஆணைக்குழுவின் நிர்வாகப் பரப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்ற எவ்விடயத்துடனும் தொடர்புறுகின்ற வழிகாட்டிகளை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்படாது. |

| | | |
|---|---|---|
| **அரசியலமைப்பின் உறுப்புரை 104ஆ (5) (ஆ) ஆனது** தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிகளுடன் அரச ஊடகங்கள் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துகின்றது.<br><br>**உறுப்புரை 104ஆ (5) (ஆ)** உட்பந்தி (அ) வின் கீழ் வழங்கப்படுவதான அத்தகைய வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினது தவிசாளரினதும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தவிசாளரினதும் மற்றும் அரசினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வேறு ஒவ்வொரு ஒளிபரப்பு அல்லது ஒலிபரப்பு தொழில்முயற்சியின் பிரதான நிறைவேற்று அலுவலரதும் கடமையாதல் வேண்டும். | **20 ஆவது திருத்தத்தின் 20(3) ஆம் வாசகமானது உறுப்புரை 104ஆ (5) (ஆ) இனை நீக்கி பின்வருவனவற்றினூடாக பதிலீடு செய்கின்றது:**<br><br>104ஆ (5) (ஆ) விடயத்துக்கேற்ப, எவரேனும் <u>**ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புத் தொழிற்படுத்துநர் அல்லது செய்தித்தாளொன்றின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர்**</u>, பந்தி (அ) இன் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டவாறான எவையேனும் வழிகாட்டி நெறிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அவர்களின் கடமையாதல் வேண்டும். | ஏதேனும் தேர்தலொன்றினை அல்லது சர்வசன வாக்கெடுப்பினை நடத்துவது தொடர்பாக, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலினை நடத்துவதற்கு அவசியமானதென ஆணைக்குழு கருதுகின்ற மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடுகின்ற வழிகாட்டிகளுடன் இணங்கி ஒழுகுதலை உறுதிப்படுத்த வேண்டுமென அனைத்து ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புத் தொழிற்படுத்துநர்கள் மற்றும் செய்தித்தாளொன்றின் உரிமையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களும் தேவைப்படுத்தப்படுவர். இதற்கு முன்னர் இணங்கி ஒழுகுதல் தொடர்பான இவ் ஏற்பாட்டின் பிரயோகம் அரசினால் சொந்தங் கொள்ளப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.<br><br>இது 18ஆம் திருத்தத்தில் காணப்பட்ட நிலைப்பாட்டிற்கு மீள செல்வதாக அமைந்துள்ளது. |
| **அரசியலமைப்பின் உறுப்புரை 104 உ (1)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்<br><br>104 உ (1) தேர்தல்கள் ஆணையாளர் நாயகமொருவர் இருத்தல் வேண்டும். அவர் <u>**அரசியலமைப்புப் பேரவையின் அனுமதிக்கமைவாக**</u>, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய | **20 ஆவது திருத்தத்தின் 21 ஆம் வாசகமானது உறுப்புரை 104 உ (1) இனை நீக்கி பின்வருவனவற்றினூடாக பதிலீடு செய்கின்றது:**<br><br>104 உ (1) தேர்தல்கள் ஆணையாளர் நாயகமொருவர் இருத்தல் வேண்டும்; அவர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவினால் | தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் நியமனத்திற்கான அரசியலமைப்பு பேரவையின் அனுமதி இனிமேல் தேவைப்படுத்தப்படாது.<br><br>இதுவும் 18 ஆம் திருத்தத்தின் நிலைப்பாட்டிற்கு மீள செல்வதாக அமைந்துள்ளது. |

| | | |
|---|---|---|
| நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>**அரசியலமைப்பின் உறுப்புரை 104 எள** ஆனது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்புடன் இணங்காமை குற்றமொன்றாகும் என கூறுகின்றது.<br><br>**104 எள.** (1) எவரேனும் பகிரங்க அலுவலர், ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின், தொழிலின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட வேறு பொறுப்பு முயற்சியின் எவரேனும் ஊழியர், அரசாங்கம் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கின்ற 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட கம்பனியின் ஊழியர்-<br><br>அ) தேர்தல் ஒன்றை நடத்துவது அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவது தொடர்பிலான ஏதேனும் சட்டத்தினை வலுக்கிடலை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைவதற்கு நியாயமான காரணமன்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்றபோது அல்லது<br>ஆ) 104ஆ ஆம் உறுப்புரையின் முறையே (4) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் அல்லது (5) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட | நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>**20 ஆவது திருத்தத்தின் 22 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 104 எள இனை நீக்குகின்றது.** | உறுப்புரை **104 எள** இன் நீக்கமானது, தேர்தலொன்றினை அல்லது சர்வசன வாக்கெடுப்பொன்றினை நடத்துவது தொடர்பான ஏதேனும் சட்டத்தின் அமுலாக்கத்தினை பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பினை ஆணைக்குழுவிற்கு வழங்கத் தவறுகின்றமை அல்லது ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஏதேனும் பணிப்புக்கள் அல்லது வழிகாட்டிகளுடன் இணங்கத் தவறுகின்றமை என்பன குற்றமொன்றாகாது என்பதனை கூறுகின்றது. |

| | | |
|---|---|---|
| எவையேனும் பணிப்புக்களுடன் அல்லது வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்றபோது<br><br>அவர் குற்றமொன்று புரிந்தவர் ஆவார் என்பதுடன் நூறாயிரம் மூபாய்க்கு மேற்படாத தண்டப்படணம் அல்லது மூன்று வருடங்களுக்கு மேற்படாத சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் மற்றும் சிறைதண்டனை ஆகிய இரண்டிற்கும் கடப்பாடுடையவராதல் வேண்டும்.<br><br>(2) அரசியமைப்பின் 154 ஞ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்குமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். | | |
| **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீதான தாக்கம்** | | |
| **அரசியலமைப்பின் உறுப்புரை 155அ(1) ஆனது** அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலுடன் மட்டுமே தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினரொருவரை ஜனாதிபதியால் நியமிக்க முடியும் என குறிப்பிடுகின்றது.<br><br>**அரசியலமைப்பின் உறுப்புரை 155அ(1) ஆனது** அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலுடன் மட்டுமே தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினரொருவரை ஜனாதிபதியால் நீக்க | **20 ஆவது திருத்தத்தின் 42 ஆம் வாசகம் உறுப்புரை 155அ(1) பின்வருமாறு வாசிக்கப்படுமாறு மாற்றுகின்றது:** ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஏழுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.<br><br>**உறுப்புரை 155அ(4)** ஒவ்வொரு உறுப்பினரும் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு, (…) அல்லது ஜனாதிபதியினால் | ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் தொடர்பில் ஜனாதிபதிக்கு மட்டுப்படுத்தப்படாத அதிகாரங்கள் காணப்படுகின்றது. இது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினதும் அதையொட்டி பொலிஸ் சேவையினதும் சுயாதீனத்தன்மையினை மழுங்கடிக்கும்.<br><br>இவ்வாசகமானது ஆணைக்குழுவின் |

| | | |
|---|---|---|
| முடியும் என குறிப்பிடுகின்றது.<br><br>**உறுப்புரை 155ஆ(5)** பொலிஸ்மா அதிபர், அவர் தொடர்பில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தொடர்பான கூட்டங்கள் தவிர்ந்து, ஆணைக்குழுவின் கூட்டங்களில் சமூகமாயிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கான எந்த உரிமையும் அவருக்கு இல்லை.<br><br>**உறுப்புரை 155இ** ஆனது *126 ஆம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும்* ஆணைக்குழுவினை உட்படுத்துகின்றது. | பதவியலிருந்து நீக்கப்படும் வரையில் (…) பதவி வகித்தல் வேண்டும்.<br><br>**20 ஆவது திருத்தத்தின் 43 ஆம் வாசகம் உறுப்புரை 155ஆ (5) இனை நீக்குகின்றது.**<br><br>**20 ஆவது திருத்தத்தின் 44 ஆம் வாசகம் இது பின்வருமாறு வாசிக்கப்படுமாறு மாற்றுகின்றது:** *126 ஆம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைவாக,* நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும் இவ்வத்தியாயத்தின் கீழ் வேறேதேனும் சட்டத்தின்மூலம் ஆணைக்குழுவுக்கு, குழுவொன்றுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடைமையைப் பின்பற்றி அத்தகைய ஆணைக்குழுவால், அல்லது குழுவொன்றால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரிப்பதற்கான அல்லது அதன்மீது எடுத்து மொழிவதற்கு அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.<br><br>**20 ஆவது திருத்தத்தின் 46 ஆம் வாசகம்** | உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் தொடர்பான அரசியலமைப்பு நிலைப்பாட்டினை 18 ஆம் திருத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டிற்கு மீண்டும் கொண்டு செல்கின்றது.<br><br>இனிமேல் ஆணைக்குழுவின் கூட்டங்களில் பிரசன்னமாவதற்கு பொலிஸ்மா அதிபர் உரித்துடையவரல்ல. |

| | | |
|---|---|---|
| **அரசியலமைப்பின் 155எ-155ஔள வரையான உறுப்புரைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கெதிராக மேன்முறையீடு செய்யும் உரிமை என்பனவற்றை குறிப்பிடுகின்றன.** | **பின்வரும் புதிய உறுப்புரையினைச் சேர்க்கின்றது**<br><br>**உறுப்புரை 155ஊஊ.** ஒரு பொலிஸ் அலுவலருக்கெதிராக அல்லது பொலிஸ் படையினருக்கெதிராகப் பொதுமக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆளிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக்கவனிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிவர்த்தியளித்தலும் வேண்டும். இந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது, பொதுமக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆட்களிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக் கவனித்துப் புலனாய்வு செய்வதற்கான நடவடிக்கை முறைகளைத் தாபிப்பதற்கு விதிகளையாக்கலாம்.''<br><br>**20 ஆவது திருத்தத்தின் 47-51 வரையான வாசகங்கள் 155எ-155ஔள வரையான உறுப்புரைகளை நீக்குகின்றது.** | பொலிஸ் அதிகாரிகளின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பணிநீக்கம் தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு காணப்பட்ட அதிகாரங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட குழுவொன்றினால் அல்லது அதிகாரியினால் பதவி உயர்வு, இடமாற்றம் அல்லது ஏதேனும் ஒழுக்காற்று விடயம் தொடர்பில் அளிக்கப்பட்ட கட்டளையொன்றினால் பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரியொருவர் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை என்பவற்றை இது நீக்குகின்றது. |
| **நீதி சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீதான தாக்கம்** | | |
| **உறுப்புரை 111ஈ ஆனது நீதி சேவை ஆணைக்குழுவின் ஆக்கக்கூறினை குறிப்பிடுகின்றது** | **20 ஆவது திருத்தத்தின் 25 ஆம் வாசகம் உறுப்புரை 111ஈ இனை நீக்கி பின்வருமாறு பதிலீடு செய்கின்றது:**<br><br>உறுப்புரை 111ஈ (1) ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு நீதிபதிகளையும் கொண்ட நீதி சேவை | உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தின்கீழ், ஜனாதிபதி உச்ச நீதிமன்றத்திலுள்ள நீதிபதிகளின் தொழில் மூப்புநிலை மற்றும் முதனிலை நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிய அனுபவம் ஆகிய |

| | | |
|---|---|---|
| உறுப்புரை 111ஈ<br><br>(1)அரசியலமைப்பு பேரவையின் அனுமதிக்கமைவாக ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு அதிசிரேஷ்ட நீதிபதிகளையும் கொண்ட நீதி சேவை ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்.<br><br>**(2) பிரதம நீதியரசரும், உயர்நீதிமன்றத்தின் அதிசிரேஷ்ட இரண்டு நீதிபதிகளும் முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவராக சேவையாற்றிய ஏதேனும் நீதிமுறை அனுபவத்தைக் கொண்டிராது உள்ளவிடத்து, ஆணைக்குழுவானது பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றத்தின் அதிசிரேஷ்ட நீதிபதி மற்றும் முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதியாக அனுபவத்தை கொண்டுள்ள அத்தகைய நீதிமன்றத்தின் அடுத்துவரும் அதிசிரேஷ்ட நீதிபதி என்போரை கொண்டிருத்தல் வேண்டும்.**<br><br>(3) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.<br><br>**ஆணைக்குழுவின் உறுப்பினரொருரை நீக்குதல்**<br><br>**உறுப்புரை 111உ (6)** ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியுடன் குறித்தளிக்கப்படும் காரணத்திற்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். | ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும்.<br><br>(2) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராதல் வேண்டும்.<br><br>**20 ஆவது திருத்தத்தின் 26 ஆம் வாசகம் உறுப்புரை இதனை நீக்கி பின்வருமாறு பதிலீடு செய்கின்றது** (6) ஜனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்திற்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். | எதனையும் கருத்திற்கொள்ளாது அவர்களுள் எவரேனும் இருவரை நீதி சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கலாம். பாராளுமன்றப் பேரவையின் அனுமதி என்ற தேவைப்பாடின்றி ஜனாதிபதியால் அவர்களை நியமிக்க மற்றும் நீக்க முடியும்.<br><br>இது நீதி சேவை ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதிக்கு மட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குகின்றது. இது ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை மற்றும் அதனையொட்டி நீதித்துறையின் சுயாதீனத்தன்மை என்பவற்றை மழுங்கடிக்கும். மேலும், ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கான கட்டளைவிதிகளை நீக்கியுள்ளமையானது நியமனச் செயன்முறையில் வெளிப்படைத்தன்மையினை குறைக்கும் என்பதுடன் இவ் அலுவலகத்திற்கு நியமிக்கப்படும் நபர்களின் பொருத்தப்பாட்டுத் தன்மை தொடர்பான கரிசனைகளை எழுப்பும்.<br><br>இவ்வாசகமானது ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் தொடர்பான அரசியலமைப்பு நிலைப்பாட்டினை 18 ஆவது திருத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு நிலைப்பாட்டிற்கு மீண்டும் இட்டுச் செல்கின்றது. |

| இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு மீதான தாக்கம் | | |
|---|---|---|
| | **20 ஆவது திருத்தத்தின் 54 ஆம் வாசகம்**<br><br>அரசியலமைப்பின் அத்தியாயம் XIXA (உறுப்புரை 156அ) இத்தால் நீக்கப்படுகின்றது. | பாராளுமன்றம் புதியதொரு சட்டத்தை நிறைவேற்றுகின்ற வரையில் 1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டத்தின் அரசியலமைப்பு அங்கீகாரத்தை நீக்குகின்றது.<br><br>எதிர்காலத்தில் ஒரு அரசாங்கம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினை சாதாரண பெரும்பான்மையினூடாக இல்லாதொழிக்கலாம்.<br><br>அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின்கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் காணப்படவில்லை. |

| தேசிய கணக்காய்வு சேவை ஆணைக்குழு மீதான தாக்கம் | | |
|---|---|---|
| **கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனம்**<br>**உறுப்புரை 153 (1)** கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமை பெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைக்கமைய ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலமளவு பதவி வகித்தலும் வேண்டும். | **20 ஆவது திருத்தத்தின் 31 ஆம் வாசகம் இவ் ஏற்பாட்டினை நீக்கி பின்வருவனவற்றால் பதிலீடு செய்துள்ளது:**<br><br>**உறுப்புரை 153(1)** *ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவரும்* நன்னடத்தையினை கொண்டிருக்கின்ற காலம்வரையில் பதவி வகிக்க வேண்டியவருமான கணக்காய்வாளர் நாயகமொருவர் இருத்தல் வேண்டும. | தற்போதுள்ளதன்படி, கணக்காய்வாளர் நாயகம் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற தகைமைவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவராக இருத்தல் வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தமானது எந்தவொரு நபரும் ஜனாதிபதியால் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்படுவதனை ஏற்பாடு செய்யும் விதத்தில் இதனை மாற்றுகின்றது. இது நியமனச் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்காய்வாளர் நாயகமாக பதவி வகிக்கக்கூடிய நபரின் பொருத்தப்பாட்டுத்தன்மை தொடர்பான கரிசனைகளை எழுப்புகின்றது. |
| **உறுப்புரை 154(8) இல் சொல்லப்பட்டுள்ள "தகுதிவாய்ந்த கணக்காளர்" என்பதன் வரையறை உறுப்புரை 153(1) இன் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்திற்கு பொருந்தும் என உறுப்புரை 154(9) குறிப்பிடுகின்றது** | **20 ஆவது திருத்தத்தின் 40 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (9) இனை நீக்குகின்றது** | |
| **உறுப்புரை 153 (4)** கணக்காய்வாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதுள்ள போது, கணக்காய்வாளர் நாயகத்தின் இடத்தில் பதில் கடமையாற்றுவதற்கென ஜனாதிபதி, அரசியலமைப்பு பேரவையின் விதப்புரைக்கமைய ஆளொருவரை நியமிக்கலாம். | **உறுப்புரை 153 (4)** கணக்காய்வாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக உள்ளபோதெல்லாம், கணக்காய்வாளர் நாயகத்தின் இடத்தில் அவருக்கு பதிலாக செயலாற்றுவதற்கு *ஜனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம்.* | இவ்வாசகமானது கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனத்திற்கான தேவைப்பாடுகளை மாற்றுவதனூடாக அதன் அரசியலமைப்பு நிலைப்பாட்டினை மீண்டும் 18 ஆவது திருத்தத்தின் நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. |
| 153அ – 153ஏ வரையான உறுப்புரைகள் தேசிய கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் கூட்டங்கள், அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள், விடுபாட்டுரிமைகள், | **20 ஆவது திருத்தத்தின் 32-39 வரையான வாசகங்கள் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 153அ-ஏ வரையான உறுப்புரைகளை நீக்குகின்றது** | 20 ஆவது திருத்தமானது கணக்காய்வு சேவை ஆணைக்குழு தொடர்பான உறுப்புரைகளை நீக்கி, ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு பாதுகாப்பினை |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. | | நீக்குகின்றது. இது 18 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட நிலைப்பாட்டினை ஒத்ததாகும். |
| **கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரங்கள்**<br><br>**உறுப்புரை 154 (1)** கணக்காய்வாளர் நாயகம் அரசாங்கத்தின் அனைத்து திணைக்களங்கள், ஜனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் ஆணைக்குழுக்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூர் அதிகார சபைகள், பகிரங்க கூட்டுத்தாபணங்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதுமான எந்த கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி சபை வைத்திருக்கின்றதோ அக்கம்பனிகள் என்பவற்றை, அவற்றின் கணக்குகள் உள்ளடங்களாக, கணக்காய்வு செய்தல் வேண்டும். | **20 ஆவது திருத்தத்தின் 40 ஆம் வாசகம் உறுப்புரை 154 (1) இனை நீக்கி பின்வருவனவற்றால் பதிலீடு செய்துள்ளது:**<br><br>எல்லா அரசாங்கத் திணைக்களங்களினதும், அமைச்சரவையின், நீதிச்சேவை ஆணைக்குழுவின், பகிரங்க சேவை ஆணைக்குழுவின், மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின், தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலகங்களின் கணக்குகளையும் உள்ளூர் அதிகாரசபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் தொழிற் பொறுப்பு முயற்சிகள் அல்லது வேறு பொறுப்பு முயற்சிகள் ஆகியவற்றின் கணக்குகளையும், கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வு செய்தல் வேண்டும். | ஜனாதிபதி செயலாளரின் அலுவலகம் மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரின் அலுவலகம் என்பன இனிமேல் கணக்காய்வாளர் நாயகத்தினால் தணிக்கை செய்யப்பட வேண்டுமென அரசியலமைப்புரீதியாக தேவைப்படுத்தப்படாது. இது 18 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட நிலைப்பாட்டினை ஒத்ததாகும். இது இவ் அலுவலகங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் மக்களுக்கு பொறுப்புகூறும் தன்மை என்பவற்றினை குறைக்கும். |

| பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீதான தாக்கம் | | |
|---|---|---|
| **உறுப்புரை 54 (1)**<br><br>பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.<br><br>பகிரங்கசேவை ஆணைக்குழுவின் உறுப்பினரை அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலுடன் மட்டுமே ஜனாதிபதியால் நீக்க முடியும்.<br><br>**உறுப்புரை 56 (1)**<br><br>ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட (ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவிராத) மூன்று பேரைக் கொண்ட குழுவொன்றுக்கு, | **20 ஆவது திருத்தத்தின் 8 ஆம் வாசகம் இவ் உறுப்புரையினை பின்வருமாறு பதலீடு செய்கின்றது:**<br><br>உறுப்புரை 54 (1)<br>"ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருக்க வேண்டியதும், (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்ளூ அவர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர், பகிரங்க அலுவலர்களாகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களாகவிருத்தல் வேண்டும். ஜனாதிபதி, அதன் தவிசாளராக அத்தகைய உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்."<br><br>**20 ஆவது திருத்தத்தின் 8 ஆம் வாசகம் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியால் நீக்கப்படுவதனை அனுமதிக்கின்றது**<br><br>**20 ஆவது திருத்தத்தின் 9 ஆம் வாசகம் இவ் உறுப்புரையினை பின்வருமாறு பதலீடு செய்கின்றது:**<br><br>**உறுப்புரை 56 (1)**<br><br>ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட (ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவிராத) மூன்று பேரைக் கொண்ட குழுவொன்றுக்கு, | பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்றப் பேரவையின் ஒப்புதலின்றியே ஜனாதிபதியால் நியமிக்கப்பட மற்றும் நீக்கப்பட முடியும். இது ஆணைக்குழு தொடர்பாக தலையீடுகளற்ற ஒரு அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது என்பதுடன் இது மறுதலையாக ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையினைப் பாதிக்கும். இது பகிரங்க சேவையின் சுயாதீனத்தன்மை மழுங்கடிக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.<br><br>இவ்வாசகமானது ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் தொடர்பான அரசியலமைப்பு நிலைப்பாட்டினை 18 ஆவது திருத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு நிலைப்பாட்டிற்கு மீண்டும் இட்டுச் செல்கின்றது. |

| | | |
|---|---|---|
| *ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான,* அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பவற்றுக்கான தத்துவங்களை ஆணைக்குழு கையளிக்கலாம். | *அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான,* அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பவற்றுக்கான தத்துவங்களை ஆணைக்குழு கையளிக்கலாம். | |
| | **20 ஆவது திருத்தத்தின் 10 ஆம் வாசகம் இவ் உறுப்புரையினை பின்வருமாறு பதலீடு செய்கின்றது:** | |
| **உறுப்புரை 57 (1)**<br>ஆணைக்குழுவானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடவடிக்கை முறைக்கும் அமைய, *ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான,* அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பவற்றுக்கான தத்துவங்களை பகிரங்க அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம். | **உறுப்புரை 57 (1)**<br>ஆணைக்குழுவானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடவடிக்கை முறைக்கும் அமைய, *அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான,* அத்தகைய வகுதியினரான பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பவற்றுக்கான தத்துவங்களை பகிரங்க அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம். | |
| | **20 ஆவது திருத்தத்தின் 11 ஆம் வாசகம் இவ் உறுப்புரையினை பின்வருமாறு பதலீடு செய்கின்றது:** | |
| **உறுப்புரை 61அ**<br>*59ஆம் உறுப்புரையினதும், 126ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகளுக்கமைவாக,* நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது வேறேதேனும் | **உறுப்புரை 61அ**<br>*126ஆம் உறுப்புரையின் (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக,* நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், இவ்வத்தியாயத்தின் கீழ் அல்லது வேறேதேனும் | |

| | | |
|---|---|---|
| சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது ஒரு குழுவுக்கு அல்லது ஒரு பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி ஆணைக்குழுவால், ஒரு குழுவினால் அல்லது ஏவரேனும் ஒரு பகிரங்க அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிவை விசாரிப்பதற்கான, அதன் மீது எடுத்து மொழிவதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது. | சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது ஒரு குழுவுக்கு அல்லது ஒரு பகிரங்க அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பின்பற்றி ஆணைக்குழுவால், ஒரு குழுவினால் அல்லது ஏவரேனும் ஒரு பகிரங்க அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிவை விசாரிப்பதற்கான, அதன் மீது எடுத்து மொழிவதற்கான அல்லது அதனை எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்துவதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது. | |
| **தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மீதான தாக்கம்** | | |
| | **20 ஆவது திருத்தத்தின் 55 ஆம் வாசகம்**<br><br>அரசியலமைப்பின் அத்தியாயம் XIXB (156ஆ-156ஏ வரையான உறுப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றது. | தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஒழிக்கப்படுகின்றது.<br><br>அரசாங்க நிறுவனங்களினால் செய்யப்படுகின்ற கொள்முதல்களுக்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டித்தன்மை மிக்க மற்றும் பெறுமதிமிக்க நடபடிமுறைகள் மற்றும் வழிகாட்டிகளை ஆக்குதலே இவ் ஆணைக்குழுவின் பணியாகும்.<br><br>கொள்முதல் நடபடிமுறைகளை கண்காணித்தல், அறிக்கையிடுதல் மற்றும் விசாரணை செய்தல். |

| வேறு மாற்றங்கள் | | |
|---|---|---|
| நபரொருவர்<br><br>➢ 35 வயதிற்கு குறைந்தவராக இருப்பின் ***(அரசியலமைப்பின் உறுப்புரை 92(அ))*** அல்லது<br><br>➢ இரட்டைக் குடியுரிமையுள்ள பிரஜையாக இருப்பின் ***(அரசியலமைப்பின் உறுப்புரை 92(ஆ))***<br><br>அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியவற்றவர் ஆவார். | **20 ஆவது திருத்தத்தின் 18 ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 92 இனை திருத்துகின்றது**<br><br>இவ் உறுப்புரையின் உட்பந்தி (அ) இல் காணப்படுகின்ற "முப்பத்தைந்து" என்ற சொற்களை "முப்பது" என்ற சொல்லினால் பதிலீடு செய்கின்றது. | <u>முப்பது</u> வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியுள்ளவராகின்றார்.<br><br>இரட்டைக் குடியுரிமை உள்ள நபர்கள் இனிமேல் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர்களாக்கப்பட மாட்டார்கள். |
| | **20 ஆவது திருத்தத்தின் 56 ஆம் வாசகம்**<br><br>அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையிலுள்ள, "பகிரங்க அலுவலர்" என்பதற்கான வரைவிலக்கணம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இவ்வுறுப்புரை திருத்தப்படுகின்றது. | புதிய வரைவிலக்கணத்தின்படி கீழ்வருவோர் அரசியலமைப்பின் உறுப்புரை 170 இன்கீழ் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படமாட்டார்கள்<br><br>➢ மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சார்த்துகைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ நிதி ஆணைக்குழுவின் |

| | | |
|---|---|---|
| | | உறுப்பினர்கள்<br>➢ எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ உத்தியோகபூர்வ மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்<br>➢ கணக்காய்வாளர் நாயகம்<br><br>புதிய வரைவிலக்கணத்தின்படி கீழ்வருவோர் அரசியலமைப்பின் உறுப்புரை 170 இன்கீழ் பகிரங்க அலுவலர்களாக உட்சேர்க்கப்பட்டுள்ளனர்<br><br>➢ தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்<br>➢ தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள்<br>➢ ஜனாதிபதி ஆளணியினரின் உறுப்பினர் |

| நிலைமாற்ற ஏற்பாடுகளின் தாக்கங்கள் | | |
|---|---|---|
| | **20 ஆவது திருத்தத்தின் 57 (3) ஆம் வாசகம்**<br><br>(அ) தேர்தல்கள் ஆணைக்குழு<br>(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு<br>(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br>(ஈ) இலஙகை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு<br>(ஊ) நிதி ஆணைக்குழு அத்துடன்<br>(எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு,<br><br>ஆகியவற்றில் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற ஆள்<br><br>ஒவ்வொருவரும் **அவர் முன்னரே பதவி துறந்தாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய**, **அரசியலமைப்பின் அத்தியாயம் VII அ விற்கிணங்க அந்தந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் அத்தகைய தேதி வரை** தத்தமது முறையான பதவிகளுக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும். . | இவ் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் அவர்களுடைய பதவிக்காலம் முடிவதற்கு முன்னரே பாராளுமன்றப் பேரவையினால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதனைத் தொடர்ந்து தாம் பதவி வகிப்பதனை முடிவுறுத்திக் கொள்ள வேண்டும். |